**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No.664/2021 |
| Deposition of witness for Prosecution | : P.W-3 |
| Name | : கருப்பசாமி, வயது 55 |
| Father Name/Husband Name | : பேச்சிமுத்து |
| Village | : ஆலம்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : துப்புரவு பணியாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of June 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed.)**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து துப்புரவு பணியாளர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 06.00 மணியளவில் கோவில்பட்டி, திட்டங்குளம், குச்சி கம்பெனி அருகே நானும், மாரிக்கண்ணன் என்பவரும் வந்து கொண்டிருந்தபோது அங்கே நடந்த விபத்து சம்பந்தமாக போலீசார் வரைப்படம் வரைந்து சாட்சியாக நாங்கள் இருவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம். **(அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. இந்த வழக்கில் இறந்து போன முருகன் மற்றும் அவரது மனைவி சத்யா எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவத்துக்கு பிறகு நான் நேரடியாக கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு தான் வந்தேன் என்றால் சரிதான். கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி கையொப்பத்தை செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன

எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் எனக்கு அழைப்பாணை கொடுத்த பிறகுதான் என்னை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.